**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 694/2019 P.W. 1/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மார்கோஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தாசன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு எனது மகன் இம்மானுவேல் (எ) மானுவேல் என்பவர் உறவினர் வீட்டு நிச்சயதார்த்த வீட்டான புத்தூருக்கு சென்று விட்டு வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வரும்போது அவரை ஒரு இருசக்கர வாகனம் மோதி அடிபட்டு அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அதன்பிறகு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 30.04.2017ம் தேதி எனது மகன் இம்மானுவேல் (எ) மானுவேல் என்பவர் உறவினர் வீட்டு நிச்சயதார்த்த வீட்டான புத்தூருக்கு சென்று விட்டு வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வரும்போது அவரை அஜில்குமார் என்பவர் TN74B0218 என்ற இருசக்கர வாகனத்தில் அவரும் அவருக்கு பின்னால் ஸ்டெபின் என்பவரும்

அமர்ந்துக் கொண்டு அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து எனது மகனின் இருசக்கர வாகனத்தில் மோதி அவரும் அவரது பின்னால் அமர்ந்திருந்த சிபுவும் அடிபட்டு அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். மேலும் எனது மகன் 14.05.2017ம் தேதி காலை 09.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். இது சம்மந்தமாக சிபு புகார் கொடுத்ததாகவும் இது குறித்து போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை**</u>

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 694/2019 P.W. 2/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கிறிஸ்டி | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. மார்கோஸ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. அ.சா.1 எனது அப்பா. 30.04.2017 அன்று என இரண்டாவது தம்பி இம்மானுவேல் (எ) மானுவேல் என்பவர் உறவினர் வீட்டு நிச்சயதார்த்த வீட்டான புத்தூருக்கு சென்று விட்டு வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வரும்போது அவரது நண்பர் வண்டி ஓட்ட எனது தம்பி பின்னால் அமர்ந்திருந்த போது கருங்கல் அருகே ஒரு இருசக்கர வாகனம் மோதி அடிபட்டு அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அதன்பிறகு எனது தம்பி சிகிச்சை பலனின்றி 14.05.2017 அன்று இறந்து விட்டார். எனது தம்பியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடந்தது. அதில் நான் சாட்சியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.